




dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI


www.dhinakani.com

காலை நாளிதழ்






| Vol: 02 | Issue: 274 | 4 Pages | 2.5.2025 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 274 | 4 பக்கங்கள் | 2.5.2025 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்**
**பழித்த தொழித்து விடின்**

**விளக்கம்:**

உலகம் பழிக்கும் தீயொழுக்கத்தை விட்டு விட்டால் மொட்டை அடித்தலும் சடை வளர்த்தலுமாகிய புறக்கோலங்கள் வேண்டா.

## "அடுத்த போப் ஆண்டவர் நான் தான்" டிரம்ப் நகைச்சுவை



வாஷிங்டன், மே.3

கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவரான போப் பிரான்சிஸ் (வயது 88), உடல் நலக்குறைவு காரணமாக கடந்த 21ந் தேதி வாடிகனில் மரணம் அடைந்தார். அவரது உடல் கடந்த 21ந் தேதி முதல் வாடிகன் புனித பீட்டர் பேராலயத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. உலகம் முழுவதிலும் இருந்து லட்சக்கணக்கான மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து போப் ஆண்டவரின் உடலுக்கு இறுதி மரியாதை செலுத்தினர். அதனை தொடர்ந்து அவரது உடல் 26ந் தேதி ரோமில் அடக்கம் செய்யப்பட்டது. போப் பிரான்சிஸ் மறைவை தொடர்ந்து புதிய போப்யார்?என்றஎதிர்பார்ப்புஉலகம்முழுவதும்எழுந்துள்ளது.இந்நிலையில் போப் பிரான்சிஸ் மறைவுக்குப் பிறகு வரும் 7ம் தேதி புதிய போப்பை தேர்வு செய்வதற்கான கர்தினால்களின் மாநாடு தொடங்க இருக்கிறது.

உலகம் முழுவதும் 252 கர்தினால்கள் உள்ள நிலையில், போப் ஆண்டவரை தேர்வு செய்வதற்கான வாக்களிக்கும் தகுதி படைத்த 80 வயதுக்கு உட்பட்டவர்கள் 135 பேர் ஆவர். அவர்கள் தங்களுக்குள்ளே இருந்து ஒருவரை புதிய போப் ஆக தேர்வு செய்வார்கள்.இதற்காக வாடிகன் சிஸ்டைன் சிற்றாலயத்தில் 7ந் தேதி கூடி தங்களுக்குள்ளே இருந்து ஒருவரை புதிய போப் ஆண்டவராக தேர்வு செய்கிறார்கள். இது ஓரிரு நாளிலோ அல்லது வாரக்கணக்கிலோ நீளும் என்பது குறிப்பிடத்தக்கது.

ரோமில் போப் பிரான்சிஸின் இறுதிச் சடங்கில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கலந்து கொண்டார். இந்நிலையில், புதிய போப் தேர்வு குறித்து நகைச்சுவையாகப் பேசியுள்ளார். கத்தோலிக்க திருச்சபையை யார் வழிநடத்த வேண்டும் என்பது குறித்த அவரது கருத்து கேட்கப்பட்டதற்கு டிரம்ப், "நான் போப் ஆண்டவராக இருக்க விரும்புகிறேன்; அதுதான் எனது முதல் தேர்வாக இருக்கும்" என்றார்.

மேலும் போப் பிரான்சிஸுக்குப் பதிலாக யார் இருக்க வேண்டும் என்று கேட்டபோது, பதில் அளித்த டிரம்ப், நியூயார்க் வெளியே இருக்கும் ஒரு கார்டினல் எங்களிடம் இருக்கிறார், அவர் மிகவும் நல்லவர், எனவே என்ன நடக்கிறது என்று பார்ப்போம் இவ்வாறு அவர் கூறினார்.

## பாகிஸ்தானில் 10 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை



லாகூர், மே.2

பாகிஸ்தானில் பலூசிஸ்தான் கிளர்ச்சிப்படை, தெக்ரிக் ஐ தலிபான் பாகிஸ்தான் உள்பட பல்வேறு பயங்கரவாத அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. இந்த பயங்கரவாத அமைப்புகளுக்கும், பாதுகாப்புப்படையினருக்கும் இடையே அவ்வப்போது மோதல் ஏற்பட்டு வருகிறது. இந்தநிலையில், பலுசிஸ்தான் மாகாணத்தில் இரண்டு தனித்தனி சம்பவங்களில் 10 பயங்கரவாதிகளை பாகிஸ்தான் பாதுகாப்புப் படையினர் கொன்றதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கெச்,ஜியாரத்மாகாணத்தில்பயங்கரவாதிகள்இருப்பதுகுறித்துஅந்நாட்டின் உளவுத்துறைக்குத் ரகசிய தகவல் வந்தது. இதனிடையே இன்டர்சர்வீசஸ் பப்ளிக் ரிலேஷன்ஸ் படி, மாவட்டங்களில் தனித்தனி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. பாதுகாப்புப் படையினருக்கும் ஆயுதமேந்திய பயங்கரவாதிகளுக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது. அப்போதுபயங்கரவாதிகளுக்குஎதிராகநடத்தப்பட்டதேடுதல்வேட்டையில் 10 பயங்கரவாதிகளைப் பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றுள்ளனர்.

கொல்லப்பட்ட பயங்கரவாதிகளிடமிருந்து ஆயுதங்கள், வெடிமருந்துகள் மீட்கப்பட்டன, அவர்கள் பாதுகாப்புப் படையினருக்கு எதிரான ஏராளமான தாக்குதல்களிலும் பொதுமக்களைக் கொன்றதிலும் ஈடுபட்டதும் தெரியவந்துள்ளது.

## கனடா பிரதமராக மார்க் கார்னி மீண்டும் தேர்வு பிரதமர் மோடி வாழ்த்து

ஒட்டாவா, மே.2

கனடாவில் 2015ம் ஆண்டு முதல் பிரதமராக இருந்து வந்த ஜஸ்டின் ட்ரூடோ கடந்த ஜனவரி மாதம் தனது பதவியை ராஜினாமா செய்தார். அமெரிக்க அதிபராகடிரம்ப்பொறுப்பேற்றதையடுத்துகனடாமீதானவரியைஅதிரடியாக அதிகரித்தார்.

உள்நாட்டு அரசியல் பிரச்சினை, டிரம்ப் வரி விதிப்பு உள்பட பல்வேறு காரணங்களால் லிபரல் கட்சியை சேர்ந்த ட்ரூடோ பிரதமர் பதவியை ராஜினாமா செய்தார். இதையடுத்து, கனடா மத்திய வங்கியின் முன்னாள் தலைவரும், லிபரல் கட்சியை சேர்ந்தவருமான மார்க் கார்னி புதிய பிரதமராக தேர்வு செய்யப்பட்டார்.

அவர் கடந்த மாதம் 14ந் தேதி கனடாவின் 24வது பிரதமராக பதவியேற்றார். கனடா நாடாளுமன்றத்தின் பதவிகாலம் வரும் அக்டோபர் மாதம் வரை இருக்கும் நிலையில் பிரதமர் மார்க் கார்னி நாடாளுமன்றத்தை கலைத்தார். மேலும், நாடாளுமன்ற தேர்தலை முன்கூட்டியே நடத்தவும் மார்க் கார்னி அழைப்பு விடுத்தார். அதன்படி, ஏப்ரல் 28ம் தேதி கனடா நாடாளுமன்ற தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து, லிபரல் கட்சி சார்பில் பிரதமர் வேட்பாளராக மார்க் கார்னி களமிறங்கினார். கன்சர்வேட்டிவ் கட்சி சார்பில் பெர்ரி பொய்லிவ் பிரதமர் வேட்பாளாரக களமிறங்கினார். இருவரும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் தேர்தல் முடிந்தநிலையில் 43.4 சதவீதம் வெற்றி பெற்று மார்க் கார்னி மீண்டும் பிரதமராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதன்மூலம் தொடர்ந்து 4வது முறையாக லிபரல் கட்சி ஆட்சி அமைக்க உள்ளது. மேலும் காலிஸ்தான் அமைப்பின் ஆதரவு பெற்ற புதிய ஜனநாயக கட்சி வெறும் 7 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

அதேசமயம் இலங்கை தமிழர்களான அனிதா ஆனந்த், ஹரி ஆனந்த சங்கரி மற்றும் யுவனிதா நாதன் ஆகிய 3 பேரும் இந்த தேர்தலில் வெற்றி பெற்றுள்ளனர். இதற்கிடையே கனடாவை அமெரிக்காவின் ஒரு மாகாணம் என கருதிய ஜனாதிபதி டிரம்ப் அதனை தன்னுடன் இணைக்க போவதாக எச்சரிக்கை விடுத்தார். இதனை தனக்கு சவாலாக எடுத்துக்கொண்ட மார்க் கார்னி இதற்கு எதிராக தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார். அதுவே அவருக்கு வெற்றியைத் தேடித் தந்ததாக அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

இந்நிலையில் கனடாவின் புதிய பிரதமராக தேர்வு செய்யப்பட்டுள்ள மார்க் கார்னிக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்திருந்தார். இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில், "கனடாவின் பிரதமராக நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கும், லிபரல் கட்சி வெற்றி பெற்றதற்கும் மார்க் ஜே கார்னிக்கு வாழ்த்துக்கள். இந்தியாவும், கனடாவும் பகிரப்பட்ட ஜனநாயக விழுமியங்கள், சட்டத்தின் ஆட்சிக்கு உறுதியான அர்ப்பணிப்பு மற்றும் துடிப்பான மக்களுக்கு இடையேயான உறவுகளால் பிணைக்கப்பட்டுள்ளன. எங்கள் கூட்டாண்மையை வலுப்படுத்தவும், எங்கள் மக்களுக்கு அதிக வாய்ப்புகளை அளிக்கவும் உங்களுடன் இணைந்து பணியாற்றுவதை நான் எதிர்நோக்குகிறேன்" என்று அதில் பதிவிட்டுள்ளார்.

# அனைவரையும் அன்பால் ஒருங்கிணைக்க நினைத்தவர் போப் பிரான்சிஸ்: முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின்

சென்னை மே.2

முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் சென்னை, லயோலா கல்லூரியில், தமிழக துறவியர் பேரவை மற்றும் இயேசு சபை சென்னை மறைமாநிலம்இணைந்துநடத்தியதிருத்தந்தை போப் பிரான்சிஸ் நினைவு அஞ்சலி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, போப் பிரான்சிஸ் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். பின்னர் நிகழ்ச்சியில் பேசிய அவர் கூறியதாவது:

கத்தோலிக்கதிருச்சபையின்தலைவராக இருந்தாலும், கிறிஸ்தவ மத நம்பிக்கையாளர்களால் மட்டுமல்ல அனைவராலும் போற்றி மதிக்கத் தக்கமாமனிதராகதிகழ்ந்தவர்போப் ஆண்டவர் பிரான்சிஸ். அன்பு, அமைதி, இரக்கம், எளிமை ஆகியவற்றின் அடையாளமாக போப் பிரான்சிஸ் திகழ்ந்தார். உலக அமைதி, மனித நேயம், மனித உரிமைகள், சுற்றுச்சூழல் ஆகியவை குறித்து அக்கறை உள்ளவராகவும் அவர் இருந்தார். முற்போக்குக் கொள்கைகளோடு கத்தோலிக்கத் திருச்சபையை வழிநடத்தி, பெரும் மாற்றங்களை முன்னெடுத்தவர் திருத்தந்தை போப் பிரான்சிஸ்.

அணு ஆயுதங்களுக்கு எதிராக குரல் கொடுத்தவர். புறக்கணிக்கப்பட்டவர்களுக்கான அரவணைப்பையும் நீதியையும் வழங்குவதற்கு, அவரே முன் உதாரணமாக இருந்திருக்கிறார். 2015ம் ஆண்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆவணத்தை போப் பிரான்சிஸ் வெளியிட்டார். பூமி மற்றும் அதன் வளங்களை காப்பாற்ற வேண்டியது மதக் கடமை என்றும், இயற்கையை அழிப்பது மனிதர்களுக்கு எதிரான பாவம் என்றும் அதில் குறிப்பிட்டார். சமயத்தின் வழியே இயற்கைப் பாதுகாப்பை வலியுறுத்திய மாபெரும் செயலைச் செய்தவர் போப் பிரான்சிஸ்.




மதங்களைக் கடந்த தன்மை, அனைத்து மதங்களையும் ஒன்றாகக் கருதும் தன்மை அவருக்கு இருந்தது. மதங்களுக்கு இடையிலான உரையாடலுக்கான அவரது முன்னெடுப்புகள் கத்தோலிக்க உலகத்தைத் தாண்டியும் அவருக்கு பெரும் மரியாதையை பெற்றுத் தந்தது. பல்வேறு மதத் தலைவர்களைச் சந்தித்தார். அதை தனது வழக்கமாகவே வைத்துக்கொண்டார். ஒரு சில நாடுகளில் இரு மதத்தினருக்கு இடையில் பிரச்சினைகள் ஏற்பட்டபோது, அதை அவர் சமாதானம் செய்திருக்கிறார். இஸ்லாமிய நாடுகளுக்கு பயணம் செய்ததன் மூலமாக அனைவரையும் அன்பால் ஒருங்கிணைக்க நினைத்தார். அன்புதான் மதங்களின் அடையாளமாக மாறவேண்டும் என்று கருதினார்.

அடுத்த ஆண்டு அவர் இந்தியாவுக்கு வர இருந்த நிலையில் மறைந்தது கூடுதல் வருத்தமாக நமக்கெல்லாம் அமைந்திருக்கிறது. அன்பின் அடையாளமாக, அமைதியின் அடையாளமாக போப் பிரான்சிஸ் அவர்களின் புகழ் நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்கும். வன்முறைக்கும், வெறுப்புணர்வுக்கும், போர்களுக்கும் எதிரான அவரது குரல் என்றும் ஒலித்துக்கொண்டே இருக்கும். அவர் விரும்பிய அமைதி உலகம் உருவாகட்டும்! அன்பே எங்கும் நிறையட்டும்!

இவ்வாறு அவர் கூறினார்.

## தமிழ்நாடு டாஸ்மார்க் விற்பனையாளர் நல சங்கத்தின் சார்பில் பெயர் பலகை

விரைவில் டாஸ்மார்க் கடையடைப்பு போராட்டத்தில் ஈடுபடப் போவதாக தமிழ்நாடு டாஸ்மார்க் விற்பனையாளர் நல சங்கத்தின் சிறப்பு தலைவர் தெரிவித்துள்ளார். உழைப்பாளர் தினமான மே1 அன்று எழும்பூரில் உள்ள டாஸ்மார்க் தலைமை அலுவலகம் முன்பு தமிழ்நாடு டாஸ்மார்க் விற்பனையாளர் நலசங்கத்தின்சார்பில்பெயர்பலகை திறக்கப்பட்டது.

இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட சிறப்பு தலைவர் வழக்கறிஞர் கு. பாரதி தமிழ்நாடு டாஸ்மார்க் விற்பனையாளர் நல சங்க பெயர் பலகையை திறந்து வைத்தார்.




தமிழகத்தில் தற்போது நடந்து முடிந்த சட்டமன்றத்தில் டாஸ்மார்க் ஊழியர்களுக்கு 2000 ரூபாய் உயர்த்தியது கண்டனத்திற்குரியது என்று தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக வழக்கறிஞர் கு. பாரதி. மாநில பொதுச் செயலாளர் குமார் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தார் இந்நிகழ்ச்சியில் டாஸ்மார்க் விற்பனையாளர் நல சங்கத்தின் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## தாராபுரம் கட்டிடப் பணியாளர்கள் நல சங்க ஊர்வலத்தை தொடங்கி வைத்து அந்தச் சங்கத்தின் புதிய அலுவலக கட்டிடத்தை நகர மன்ற தலைவர் பாப்பு கண்ணன் திறந்து வைத்தார்

தாராபுரம்கட்டிடப்பணியாளர்கள் நல சங்க ஊர்வலத்தை தொடங்கி வைத்து அந்தச் சங்கத்தின் புதிய அலுவலக கட்டிடத்தை திறந்து வைத்தார் நகரமன்ற தலைவர் பாப்பு கண்ணன் அவர்கள்

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் மே 1 தொழிலாளர்கள் தினத்தை முன்னிட்டு தாராபுரம் கட்டிட பணியாளர்கள் சங்கத்தின் ஊர்வலத்தை தொடங்கி வைத்து முக்கிய வீதி வழியாக தாராபுரம் அண்ணா சிலை வரை வந்தடைந்த அந்த ஊர்வலத்தில் தாராபுரம் நகர மன்ற தலைவர் பாபு கண்ணன் அவர்கள் கலந்து கொண்டு கட்டிட தொழிலாளர்களை சிறப்பித்தார் மேலும் அவர்களது சங்க அலுவலக கட்டிடம் பூக்கடைக்காரனரில் புதிதாக திறந்து வைத்து அங்கு வந்த கட்டடம் பெண் பணியாளர்களுக்கு டிபன் பாக்ஸ் மற்றும் மதிய உணவு அளித்து சிறப்பித்தார்



இந்த விழாவில் தாராபுரம் கட்டிடப் பணியாளர்கள் சங்கத்தின் தலைவர் பாண்டியன் துணைத் தலைவர் முத்து செயலாளர் வேல்முருகன் துணைச் செயலாளர் மாரிமுத்து பொருளாளர் கிருஷ்ணமூர்த்தி துணைப் பொருளாளர் வெங்கடாசலம் உள்ளிட்ட சங்க நிர்வாகிகள் மற்றும் 500க்கும் மேற்பட்ட கட்டிட பெண் பணியாளர்கள் மற்றும் ஆண் பணியாளர்கள் கலந்து கொண்டனர்




விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி அதிமுக வடக்கு ஒன்றிய மகளிர் அணி தலைவர் P. அமராவதி வாசு பிரகாஷ் அவர்கள் கஞ்சனூர் ஆட்டோ ஓட்டுநர் அனைவருக்கும் நெஞ்சார்ந்த மே தின நல்வாழ்த்துக்கள்யுடன் இனிப்புகள் கொடுத்து சீருடை வழங்கினார் இந்நிகழ்ச்சியில் அனைத்து ஆட்டோ ஓட்டுநர்களும் கலந்து கொண்டு மகிழ்ச்சியாக சீருடை பெற்றனர்

## பள்ளிகள் திறக்கப்படும் தேதி வெயிலின் தாக்கத்தை பொறுத்து உரிய நேரத்தில் முடிவு எடுக்கப்படும் : அமைச்சர் அன்பில் மகேஸ்

திருச்சி,

பள்ளிகள் திறக்கப்படும் தேதி வெயிலின் தாக்கத்தை பொறுத்து உரிய நேரத்தில் முடிவு எடுக்கப்படும் என்று அமைச்சர் அன்பில் மகேஸ் தெரிவித்துள்ளார். திருச்சியில் பேட்டி அளித்த அவர், “கோடை விடுமுறை முடிந்து ஜூன் 2ம் தேதி பள்ளிகள் திறக்கப்படும் என அறிவித்துள்ளோம். அதிகரிக்கும் வெயிலின் தாக்கம் பொறுத்து முதலமைச்சர் அலுவலகம் சொல்வதன் அடிப்படையில் பள்ளிகள் திறக்கப்படும். தனியார் பள்ளிகளில் அதிக அளவு கட்டணம் வாங்க கூடாது. ஆணையம் நிர்ணயித்ததை விட கூடுதலாக கட்டணம் வசூலித்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும், “இவ்வாறு குறிப்பிட்டார்.





# நெல்லை: பண மோசடி செய்த முன்னாள் போஸ்ட் மாஸ்டர் கைது




திருநெல்வேலி, மே.2

திருநெல்வேலி மாவட்டம், தச்சநல்லூர், சத்திரம் புதுகுளம், பாலாஜி அவன்யூவைச் சேர்ந்த முருகன் (வயது 62), ராஜவல்லிபுரம் போஸ்ட் ஆபீஸில் போஸ்ட் மாஸ்டராக கடந்த 1.9.2004 முதல் 21.4.2008 வரை பணிபுரிந்து வந்த காலகட்டத்தில் RD புத்தகத்தில் வாடிக்கையாளர்கள் போல் போலியாக கையெழுத்திட்டு பண மோசடியில் ஈடுபட்டு வந்துள்ளார்.

இதனையடுத்து திருநெல்வேலி உட்கோட்டம், அஞ்சல் அலுவலகம், உதவி கண்காணிப்பாளர், பாலகிருஷ்ணன், முருகன் மீது நீதிமன்றத்தில் புகார் அளித்தார். அந்த புகாரின்பேரில், நீதிமன்ற உத்தரவின் படி மாவட்ட குற்றப்பிரிவில் வழக்குப்பதிவு செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்தது.

இந்த நிலையில் கடந்த 1 மாதமாக நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமுறைவாக இருந்து, தேடப்பட்டு வந்த முருகனை கைது செய்து நடவடிக்கை எடுக்க திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் உத்தரவின்படி மாவட்ட குற்றப்பிரிவுI டி.எஸ்.பி. விஜயகுமார் மேற்பார்வையில், மாவட்ட குற்றப்பிரிவு இன்ஸ்பெக்டர் அன்னலட்சுமி தலைமையிலான காவல் துறையினர் சிறப்பு சப்இன்ஸ்பெக்டர் கண்ணன், ஏட்டு முத்துராமலிங்கம் ஆகியோர் முருகனை சென்னை, தி.நகர், தெற்கு போக்ரோடு பகுதியில் இருப்பதாக கிடைத்த தகவலின் பேரில் அங்கு சென்று, நேற்று முன்தினம் (29.04.2025) கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்தனர்.

இவ்வழக்கில் போலியாக வாடிக்கையாளரின் கையெழுத்திட்டு பண மோசடியில் ஈடுபட்டு நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாக இருந்த நபரை, சிறப்பாக செயல்பட்டு கைது செய்த மாவட்ட குற்றப்பிரிவு காவல் துறையினரை மாவட்ட எஸ்.பி. பாராட்டினார்.

# நெல்லை: இலங்கைக்கு கடல் வழியாக பீடி இலைகள் கடத்தல் முயற்சி 5 பேர் கைது




திருநெல்வேலி மே.2

நெல்லை மாவட்டம், கூடங்குளம் பகுதியில் சப் இன்ஸ்பெக்டர் சூசையம்மாள் தலைமையிலான காவல் துறையினர் நேற்று முன்தினம் (29.04.2025) ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது போலீசாருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் கணக்கன்குளத்திற்கு அருகே சந்தேகப்படும்படி ஒரு லாரி, ஒரு கார் மற்றும் இருசக்கர வாகனத்தில் நின்று கொண்டிருந்த கூத்தன் குழி, சுனாமி காலனியைச் சேர்ந்த சிலுவை அந்தோணி ஜனா (வயது 20), தூத்துக்குடி மாவட்டம், ஆறுமுகம்மங்கலம், அம்மன்கோவில் தெருவைச் சேர்ந்த சந்தோஷ்குமார் (23), சிங்கத்தாகுறிச்சி, கீழத்தெருவைச் சேர்ந்த சண்முகம் (25), மூலக்கரைப்பட்டி, தெற்கு தெருவைச்சேர்ந்தமுத்துக்குமார் (40), தூத்துக்குடி மாவட்டம், பூபால ராயபுரத்தைச் சேர்ந்த அந்தோணிராஜ் (36) மற்றும் சிலரை சோதனை செய்தனர்.

அப்போது அவர்கள் சட்ட விரோதமாக பீடி இலைகளை அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக இலங்கைக்கு கடல் வழியாக கடத்திச் செல்ல முயன்றது தெரியவந்தது. இதனையடுத்து சப் இன்ஸ்பெக்டர் சூசையம்மாள் மேற்சொன்ன நபர்களை, கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் கூடங்குளம் காவல் நிலையம் அழைத்துச் சென்றார். இதுகுறித்து கூடங்குளம் போலீஸ் இன்ஸ்பெக்டர் ரகுராஜன் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு சிலுவை அந்தோணி ஜனா, சந்தோஷ்குமார், சண்முகம், முத்துக்குமார், அந்தோணிராஜ் ஆகிய 5 பேரையும் கைது செய்தார். மேலும் அவர்களிடமிருந்து 30 கிலோ எடை கொண்ட பீடி இலைகளையும், ஒரு லாரி, ஒரு கார் மற்றும் ஒரு இருசக்கர வாகனத்தையும் பறிமுதல் செய்தார்.

மேலும் போலீசார் இவ்வழக்கில் தொடர்புடைய மற்ற நபர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

# திருப்பூரில் அதிர்ச்சி சம்பவம்: செவிலியர் தலையில் கல்லை போட்டு கொலை



திருப்பூர், மே.2

திருப்பூர்மாவட்டம் பூம்புகார் நகர் குடியிருப்பு பகுதியில் தனியார் மருத்துவமனை செவிலியர் ஒருவர், தலையில் கல்லைப் போட்டு கொல்லப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

தகவல்அறிந்துவிரைந்து வந்த போலீசார், தலை மற்றும் கை நசுங்கிய நிலையில் இருந்த பெண்ணின் சடலத்தை மீட்டனர். இதனைத் தொடர்ந்து அந்த பெண் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டாரா அல்லது வேறு ஏதேனும் காரணமா என்பது குறித்து போலீசார்தீவிரமாக விசாரணை மேற்கொண்டுள்ளனர். இந்த சம்பவம் தொடர்பாக மருத்துவமனை மற்றும் அருகில் உள்ள குடியிருப்புகளில் விசாரணை நடைபெற்று வருகிறது.

மாவட்ட கலெக்டர் அலுவலகம் அருகிலேயே நடந்துள்ள இந்த கொலை சம்பவம், அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# "வெயிலால் பள்ளிகள் திறப்பு தள்ளிப்போகிறதா..?" அமைச்சர் அன்பில் மகேஸ் பதில்


அன்பில் மகேஸ் பொய்யாமொழி,

சென்னை, மே.2

நாடு முழுவதும் இன்று தொழிலாளர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக இன்று திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், பள்ளிக்கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில், முன்னாள் முதல்அமைச்சர் கருணாநிதி சிலைக்கும், மே தின நினைவுச் சின்னத்திற்கும் மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்தினார்.

இதனைத்தொடர்ந்து செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி,

"இந்த சமுதாயத்திற்காக உழைக்கக்கூடிய அனைத்து தொழிலாளர்களுக்கும், பத்திரிகைத் துறைசார்ந்தவர்களுக்கும், ஒவ்வொருவரும் அந்தந்த சமூகத்திற்காக ஒவ்வொரு வகையிலும் உழைத்து வருகின்றனர் அவர்கள் ஒவ்வொருவருக்கும் மே தின வாழ்த்துக்களை, தொழிலாளர்கள் தின வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று கூறினார்.

இதனையடுத்து பள்ளிகள் திறப்பு குறித்து கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் அளித்த அவர், "திருச்சி மாவட்டத்தில் தற்போது 104 டிகிரி வெயில் உள்ளது. பள்ளிகள் ஜூன் மாதம் 2ம் தேதி திறக்க முடிவு செய்துள்ளோம். கோடை விடுமுறை முடிந்து அன்றைய தினம் வெயிலின் தன்மையைப் பொருத்து முதல்அமைச்சர் முடிவு செய்வார்.

பள்ளிகளில் அதிகம் அளவு கட்டணம் வாங்கக் கூடாது அதற்காக கட்டண நிர்ணய ஆணையமே வைத்துள்ளோம். முன்னாள் நீதி அரசர் தலைமையில் கமிட்டி என்ன சொல்கிறதோ அதன்படி வாங்க வேண்டும். நிர்ணயித்திருப்பதைக் காட்டிலும் அதிகப்படியாக கட்டணம் வாங்கினால் கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும்" என்று அமைச்சர் அன்பில் மகேஷ் கூறினார்.

# 100 நாள் வேலை திட்டம்: தமிழகத்திற்கு ரூ.2,999 கோடி நிதி விடுவிப்பு



சென்னை, மே.2

வேலைவாய்ப்பை ஏற்படுத்தவும், வறுமையை ஒழிக்கவும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச்சட்டத்தை மத்திய அரசு கடந்த 2005ம் ஆண்டு இயற்றியது. இந்த சட்டத்தின் கீழ், 100 நாள் வேலைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஊரக வேலை உறுதித் திட்ட அட்டை வைத்திருப்பவர்கள் வேலை கோரினால் அந்த நபர்களுக்கு ஆண்டுக்கு குறைந்தபட்சம் 100 நாள் வேலை அளிக்கப்படும் என்ற உத்தரவாதத்தை இந்த திட்டம் அளிக்கிறது. இத்திட்டத்தின் கீழ் 25.25 கோடி பேர்பதிவு செய்துள்ளனர். இதில், 14.35 கோடி பேர் செயலில் உள்ள தொழிலாளர்களாக உள்ளனர்.

இதனிடையே, இந்த திட்டத்திற்கு தமிழ்நாட்டுக்கு தரவேண்டிய ரூ.4,034 கோடி நிதியை வழங்காமல் மத்திய அரசு நிறுத்தி வைத்து இருந்தது. இதற்கு அரசியல் கட்சிகள் சார்பில் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டன. திமுக சார்பில் நாடாளுமன்றத்தில் எதிர்ப்புதெரிவிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து ஆர்ப்பாட்டமும் நடைபெற்றது.

இந்த நிலையில், 100 நாள் வேலைத் திட்டத்தில் தமிழ்நாட்டுக்கான ரூ.2,999 கோடியை மத்திய அரசு விடுவித்துள்ளது. ரூ.4,034 கோடியை விடுவிக்க வேண்டும் என தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தி வந்த நிலையில் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 202425ம் ஆண்டுக்கான நிலுவைத்தொகை ரூ.1,246 கோடி மீதித்தொகையை மத்திய அரசு வழங்கும் என தமிழக அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

# பஹல்காம் தாக்குதல் எதிரொலி பாதுகாப்பு அதிகரிப்பு




சென்னை, மே.2

ஜம்மு மற்றும் காஷ்மீரில் உள்ள பஹல்காமில் கடந்த 22ந்தேதி பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் அப்பாவி சுற்றுலா பயணிகள் 26 பேர் பலியானார்கள். இது நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருந்தது. இதற்கு பின்னணியில் பாகிஸ்தானை சேர்ந்த பயங்கரவாத இயக்கத்திற்கு தொடர்பு உள்ளது என கூறப்படுகிறது. இதனால், அந்நாட்டுக்கு எதிரான நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது. இந்த சூழலில் இந்திய வான்வெளியை பாகிஸ்தான் பயன்படுத்த முடியாத வகையில் அவற்றை இந்தியா மூடியுள்ளது.

இந்நிலையில் பஹல்காம் தீவிரவாத தாக்குதலை தொடர்ந்து, சென்னையின் மேற்கு மண்டலம் பகுதிகளில் பாதுகாப்பை அதிகரிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. இதன்படி அரசு அலுவலகங்கள், புழல் சிறை, ஐ.சி.எப். போன்ற இடங்களில் கண்காணிப்பு பணிகளை தீவிரப்படுத்த காவல் துறை உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேலும் கோயம்பேடு பேருந்து நிலையம், மெட்ரோ ரெயில் நிலையம், உணவகங்கள் மற்றும் தங்குமிடங்களிலும் கண்காணிப்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

# உளுந்து, பச்சைப்பயறு குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல்: தமிழக அரசு அறிவிப்பு



சென்னை, மே.2

தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

உளுந்து, பச்சைப்பயறு, துவரைஉள்ளிட்ட பயறுவகைகளின் சாகுபடியை ஊக்குவித்து உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அறுவடை காலங்களில் ஏற்படும் விலை வீழ்ச்சியினால் விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிப்படையாமல் இருக்கவும், அவர்களின் நலனை பாதுகாக்கும் வகையில் விலை ஆதரவுத் திட்டத்தின் கீழ் விவசாயிகளிடமிருந்து உளுந்து, பச்சைப்பயறு ஆகியவை குறைந்தபட்ச ஆதரவு விலையில்தமிழக அரசால் நேரடியாக கொள்முதல் செய்யப்படுகிறது.

இந்த திட்டத்திற்கு தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம்மாநிலஇணைப்பு முகமையாகவும், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் பிரதான கொள்முதல் நிலையங்களாகவும், நாபெட், என்.சி.சி.எப். நிறுவனங்கள் கொள்முதல் முகமைகளாகவும் செயல்பட்டு வருகின்றன.

அரியலூர், ராணிப்பேட்டை, தேனி, கரூர், செங்கல்பட்டு, திருப்பூர், நாமக்கல், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, சேலம், திண்டுக்கல், நெல்லை, தென்காசி தூத்துக்குடி, விருதுநகர், ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் உளுந்து கிலோ ஒன்றிற்கு ரூ.74 என்ற குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்யப்படுகிறது.

இதேபோல, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களிலும் உளுந்து கிலோ ஒன்றுக்கு ரூ.74 என்று கொள்முதல் செய்யப்படுகிறது. மேலும், திருவள்ளூர், விழுப்புரம், திருப்பூர், சேலம், நாமக்கல், விருதுநகர், திண்டுக்கல், நாகப்பட்டினம் உள்ளிட்ட15மாவட்டங்களில் உள்ள 38 ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் பச்சைப்பயிறு கிலோ ஒன்றிற்கு ரூ.86.82 என்ற குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

இந்த திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள், கொள்முதல் நிலையங்களை அணுகி சிட்டா, அடங்கல், ஆதார் எண், ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ள கைபேசி எண், வங்கி சேமிப்பு கணக்கு புத்தக நகல் ஆகியவற்றுடன்தங்களது பெயர்களை பதிவு செய்ய வேண்டும். அவ்வாறு பதிவு செய்யும்போது பெறப்படும் கடவு சொல்லை பகிர்ந்து உளுந்து, பச்சைப்பயிறு ஆகியவற்றை விற்று பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

விவசாயிகளுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்யப்பட்ட விளைபொருட்கள்சேமிப்பு கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்ட 3 நாட்களுக்குள் அவர்களது வங்கி கணக்கில் பணம் நேரடியாக வரவு வைக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வணிக கேஸ் சிலிண்டர் விலை ரூ.15.50 குறைப்பு



சென்னை, மே.2

பாரத், இந்துஸ்தான், இந்தியன் ஆயில் ஆகிய பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் வீடுகளுக்கு 14.20 கிலோ எடையிலும், வணிக பயன்பாட்டுக்கு 19 கிலோ எடையிலும், சமையல் கியாஸ் சிலிண்டர்களை நாடு முழுவதும் வினியோகம் செய்து வருகின்றன.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலை மற்றும் அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு எண்ணெய் நிறுவனங்கள் பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் கியாஸ் சிலிண்டர்களின் விலைகளை நிர்ணயித்து வருகின்றன. இதில் சமையல் கியாஸ் சிலிண்டர்களின் விலைகளை மாதத்தின் முதல் தேதியில் மாற்றி அமைத்து வருகிறது.

அதன்படி இந்த மாதம், எண்ணெய் நிறுவனங்கள் வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி, வணிக பயன்பாட்டு சிலிண்டரின் விலை சற்று குறைந்துள்ளது. அதன்படி, சென்னையில் 19 கிலோ எடை கொண்ட வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டர் ரூ.15.50 குறைந்து ரூ.1906க்கு விற்பனை செய்யப்படுகிறது.

14.2 கிலோ எடை கொண்ட வீட்டு உபயோக கேஸ் சிலிண்டர் விலையில் எவ்வித மாற்றமும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கூடலூர் வனக்கோட்டத்தில் புலிகள் கணக்கெடுக்கும் பணி தொடக்கம்



நீலகிரி, மே.2

நீலகிரி மாவட்டம் முதுமலை புலிகள் காப்பகத்தில் காட்டு யானை, புலி, சிறுத்தை, கரடி உள்பட பல்வேறு வனவிலங்குகள் உள்ளன. இங்கு ஒவ்வொரு ஆண்டும் பருவமழைக்கு முன்பு, பின்பு வனவிலங்குகள் கணக்கெடுக்கும் பணி நடந்து வருகிறது. கடந்த சில நாட்களுக்கு முன்பு முதுமலை புலிகள் காப்பகத்துக்கு உட்பட்ட முக்குருத்தி தேசிய பூங்கா, கூடலூர் வனக்கோட்டத்தில் ஓவேலி வனப்பகுதியில் வரையாடுகள் கணக்கெடுக்கும் பணி நடந்தது.

இந்த நிலையில் கூடலூர் வனக்கோட்டத்தில் புலிகள் கணக்கெடுக்கும் பணி தொடங்கி உள்ளது. கேமரா பொறிகளை பயன்படுத்தி புலிகள் மதிப்பீட்டு பயிற்சியின் 3ம் கட்டம் வெற்றிகரமாக முடிந்ததை தொடர்ந்து, கூடலூர் வனக்கோட்டத்தில் வருடாந்திர முதல் கட்ட புலிகள் கணக்கெடுப்பு பணிகள் கடந்த மாதம் 28ந் தேதி முதல் வருகிற 5ந் தேதி நடைபெற உள்ளது.

வருடாந்திர புலிகள் கணக்கெடுப்பு பணிகளில், புலிகள்எண்ணிக்கை மற்றும் வழித்தடங்களை கண்காணிப்பதே, இதன் முக்கிய நோக்கமாக உள்ளது. புலிகள் கணக்கெடுக்கும் பணிக்காக கூடலூர் கோட்டத்திற்கு உட்பட்ட 6 வனச்சரகங்களில் 27 வழித்தடங்கள் தேர்வு செய்யப்பட்டு உள்ளன. வனச்சரகர்கள், வனவர்கள், வனக்காப்பாளர்கள், வனக்காவலர்கள், காவலர்கள் மற்றும் வேட்டை தடுப்பு காவலர்கள் உள்பட மொத்தம் 90 களபணியாளர்கள் புலிகள் கணக்கெடுக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்கள் புலிகளை தொலைநோக்கி மூலம் நேரடியாக பார்வையிடுதல், எச்சங்கள், கால் தடங்கள் போன்றவை மூலம் கணக்கெடுத்து வருகின்றனர்.

கணக்கெடுப்பு முடிந்த பின்னர், அதன் அறிக்கை துறை ரீதியாக சமர்ப்பிக்கப்பட உள்ளது என்று வனத்துறையினர் தெரிவித்தனர்.

# பொது இடங்களில் உள்ள கொடி கம்பங்களை அகற்றும் உத்தரவுக்கு எதிராக வி.சி.க. வழக்கு



மதுரை மே.2

தமிழகத்தில் பொது இடங்களில் உள்ள கொடி கம்பங்களை அகற்ற கோரும் தனி நீதிபதியின் உத்தரவை எதிர்த்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏற்கனவே மதுரை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தது. இதைத் தொடர்ந்து விடுதலை சிறுத்தைகள் கட்சியும் மேல்முறையீடு செய்துள்ளது.

இது தொடர்பாக விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில், "மதுரை பழங்காநத்தம் பகுதியில் உள்ள எங்களது கட்சியின் கொடி கம்பத்தை அகற்றக்கோரி நெடுஞ்சாலைத் துறை பொறியாளர் நோட்டீஸ் அனுப்பி உள்ளார். இந்த நடவடிக்கை அரசியல் அமைப்பு சட்டம் கொடுத்துள்ள உரிமைகளுக்கு எதிராக உள்ளது. எனவே அரசியல் கட்சி கொடி கம்பங்களை அகற்ற உத்தரவிட்ட தனி நீதிபதியின் உத்தரவை ரத்து செய்து, புதிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும்" என கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதிகள் நிஷா பானு, ஸ்ரீமதி ஆகியோர் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு பட்டியலிடப்பட்டு இருந்தது. விசாரணை செய்த நீதிபதிகள் இந்த வழக்கை விரிவான விசாரணைக்காக ஜூன் மாதத்துக்கு தள்ளி வைத்து உத்தரவு பிறப்பித்தனர்.

# புதுக்கோட்டை: பெண் கொலை வழக்கில் குற்றவாளிக்கு தூக்கு தண்டனை



புதுக்கோட்டை, மே.2

புதுக்கோட்டை பொன்நகரில் கடந்த 2021ம் ஆண்டு 1 1/4 பவுன்தங்க நகைக்காக சொந்த சித்தி மகளான லோகப்பிரியா என்ற இளம் பெண்ணை கொடூரமாக கத்தியால் குத்தியும் இரும்பு ராடால் தாக்கியும் கொலை செய்த பெருந்துறை கிராமத்தைச் சேர்ந்த அவரது சகோதரர் குற்றவாளியான லட்சுமணன் என்ற சுரேஷுக்கு, 32, தூக்கு தண்டனை விதித்து புதுக்கோட்டை மாவட்ட முதன்மை நீதிமன்ற நீதிபதி சந்திரன் தீர்ப்பு வழங்கினார்.

# உழைப்பாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துகள் விஜய்



சென்னை, மே.2

தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:

ஓய்வறியா உழைப்பினை முதலீடாக்கி, உதிரத்தை உரமாக்கி. உறுதியை ஒற்றுமையைப் படிக்கற்களாக்கி எங்கள் வலிமை என எடுத்துக் காட்டி எடுத்த பணியை முடித்துக்காட்டி உலகிற்கு அச்சாணியாகத் திகழும் தொழிலாளர்களுக்கு எந்நாளும்உறுதுணையாய் நிற்போம்!

உழைப்பாளர் உரிமை காப்போம்!

இந்த மே தினத்தில் உழைப்பாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துகள்!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 93 ஆண்டுகளுக்கு பிறகு சாதிவாரி கணக்கெடுப்பு: மத்திய அரசுக்கு நன்றி டி.டி.வி. தினகரன்



சென்னை மே2

சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கு பல்வேறு கட்சித் தலைவர்கள் மத்திய அரசுக்கு பாராட்டு தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த ஒப்புதல் அளித்துள்ள மத்திய அரசுக்கு அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் நன்றி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

பாரதப்பிரதமர்நரேந்திர மோடியின் தலைமையில் இன்று நடைபெற்ற மத்திய அமைச்சரவை கூட்டத்தில், அடுத்த மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது சாதிவாரியாக கணக்கெடுப்பை நடத்துவதற்கான ஒப்புதலை வழங்கியிருப்பது வரவேற்புக்குரியது.

மக்கள் அனைவரின் சமூக, கல்வி, வேலை வாய்ப்பு மற்றும் பொருளாதார நிலைகளை மேம்படுத்துவதற்கு தேவையானதிட்டங்களை வகுத்து அதனை செயல்படுத்துவதற்கு அடிப்படையான சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்த வேண்டும் என அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் உட்பட பல்வேறு தரப்பினர் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நேரத்தில், தமிழ்நாட்டில் பின்பற்றப்படும் 69 சதவீத இட ஒதுக்கீட்டிற்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகளில் புள்ளி விவரங்களுடன் கூடிய வலுவான வாதங்களை முன்வைப்பதற்கு உதவக் கூடிய சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை நாடு முழுவதும் நடத்த முடிவு செய்திருக்கும் மத்திய அரசுக்கு எனது மனமார்ந்த நன்றியை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## ஒழுங்கு நடவடிக்கைக் குழு அமைத்து விஜய் உத்தரவு



சென்னை, மே.2

தமிழக வெற்றிக் கழகம் சார்பில் ஒழுங்கு நடவடிக்கைக் குழு அமைத்து அக்கட்சியின் தலைவர் விஜய் உத்தரவிட்டுள்ளார். அதன்படி தலைமை ஒழுங்கு நடவடிக்கைக் குழு மற்றும் மண்டல ஒழுங்கு நடவடிக்கைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கட்சியின் கொள்கை குறிக்கோளுக்கு எதிராக செயல்படுவோர் மீது அக்குழு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைமை ஒழுங்கு நடவடிக்கைக் குழுவில் இருவர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். வடக்கு மண்டலம், மேற்கு மண்டலம், தெற்கு மண்டலம், மத்திய/கிழக்கு மண்டலம் என நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒரு மண்டலத்துக்கு நான்கு பேர் வீதம் 16 பேர் மண்டல ஒழுங்கு நடவடிக்கைக் குழு நிர்வாகிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

கழக விதிகளின்படி, தமிழக வெற்றிக் கழகத் தலைவரே, தலைமை ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் தலைவர் ஆவார். இதன்படி, பின்வரும் தோழர்களை, கழகத் தலைமை ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் உறுப்பினர்களாக நியமனம் செய்கிறேன்.

உறுப்பினர் 1. என். ஆனந்த், கழகப் பொதுச் செயலாளர்,

உறுப்பினர் 2. திருமதி சி.விஜயலட்சுமி, மாநிலச் செயலாளர், உறுப்பினர் சேர்க்கை அணி.

இக்குழுவானது, கழகத்தின் அனைத்து நிலைகளிலும் உள்ள நிர்வாகிகளும் தோழர்களும் கழகக் கட்டுப்பாட்டை மீறி, கொள்கைகள், கோட்பாடுகள், குறிக்கோள்களுக்கு எதிராகச் செயல்பட்டால் அவர்கள்மீது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இக்குழுவிற்குக் கழக நிர்வாகிகளும், தோழர்களும் முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கழக நிர்வாக வசதிக்காகத் தமிழ்நாட்டில் உள்ள வருவாய் மாவட்டங்கள் வடக்கு, மேற்கு, தெற்கு மற்றும் மத்திய /கிழக்கு என நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அதன்படி இந்த நான்கு மண்டலங்களில் உள்ள வருவாய் மாவட்டங்களுக்குட்பட்டகழகமாவட்டங்களுக்கு மண்டல ஒழுங்கு நடவடிக்கைக் குழுக்கள் நியமிக்கப்படுகின்றன.

இந்த ஒழுங்கு நடவடிக்கைக் குழுக்கள் தங்களுக்குரிய மண்டலங்களில் கழக நிர்வாகிகளும் தோழர்களும் கழகக் கட்டுப்பாட்டை மீறி, கொள்கைகள், கோட்பாடுகள், குறிக்கோள்களுக்கு எதிராகச் செயல்பட்டால், அவர்கள்மீதுகழகவிதிகளின்படி உரிய நடவடிக்கைகளை, தலைமை ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் வழிகாட்டுதல் மற்றும் அனுமதியின் பேரில் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இக்குழுக்களுக்குக் கழக நிர்வாகிகளும் தோழர்களும் முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## நெல்லையில் தங்க செயின் திருடிய பெட்ரோல் பங்க் ஊழியர் கைது

திருநெல்வேலி மே.3

நெல்லை மாவட்டம், தேவர்குளம் காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட கருப்பசாமிகோவில் தெருவை சேர்ந்த பாண்டியராஜன்(வயது35), நேற்று முன்தினம் (28.04.2025) தேவர்குளத்தில் உள்ள பெட்ரோல் பங்கில் தனது இருசக்கர வாகனத்திற்கு பெட்ரோல் போட்டு விட்டு சென்றுள்ளார். பின்பு சுப்பையாபுரம் அருகே சென்று கொண்டிருக்கும்போது தனது பையை பார்த்தபோது பையில் இருந்த தங்கச் செயினை காணவில்லை.




இதுகுறித்து பாண்டியராஜன் தேவர்குளம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அந்த புகாரின் அடிப்படையில் சப் இன்ஸ்பெக்டர் லூக் அசன் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டதில் தேவர்குளம் பெட்ரோல் பங்கில் பணிபுரிந்து வரும் மானூர், வடக்கு தெருவை சேர்ந்த முத்துராஜா (35) தங்க செயினை திருடியது தெரியவந்தது. இதனையடுத்து சப்இன்ஸ்பெக்டர் நேற்று (29.04.2025) முத்துராஜாவை கைது செய்தார். மேலும் அவர் முத்துராஜாவிடமிருந்து தங்க செயினை பறிமுதல் செய்து நடவடிக்கை எடுத்தார்.

## சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த மத்திய அரசு தீர்மானித்திருப்பது சிறப்பானது ராமதாஸ்



சென்னை, மே.1

சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கு பல்வேறு கட்சித் தலைவர்கள் மத்திய அரசுக்கு பாராட்டு தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த மத்திய அரசு தீர்மானித்திருப்பது சிறப்பானது என்று பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் பாராட்டு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

இந்தியாவில் அடுத்து நடைபெறவிருக்கும் மக்கள்தொகை கணக்கெடுப்பு சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பாக நடத்தப்படும் என்று மத்திய அரசு அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. டெல்லியில்பிரதமர்நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அரசியல் விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்ட இந்தியாவில் சமூகநீதியை நிலை நிறுத்த வகை செய்யும் இந்த முடிவு மிகவும் சிறப்பானது.

தேசிய அளவில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்பது தான் பாட்டாளி மக்கள் கட்சியின் நிலைப்பாடு ஆகும். இதற்காக 1998ம் ஆண்டு முதல் பாட்டாளி மக்கள் கட்சி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. பா.ம.க.வின் கோரிக்கையை ஏற்று 2001ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பை சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பாக நடத்த அன்றைய உள்துறை மந்திரி அத்வானி ஒப்புக்கொண்ட நிலையில், குஜராத் நிலநடுக்கம் காரணமாக அது சாத்தியமில்லாமல் போனது.

2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பை சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பாக நடத்த வேண்டும் என்று வலியுறுத்தி 24.10.2008ம் நாள் அன்றைய

உள்துறை மந்திரி சிவராஜ் பாட்டீலிடம் பா.ம.கவைச் சேர்ந்த அன்றைய மத்திய மந்திரி அன்புமணி ராமதாஸ் 140க்கும் மேற்பட்ட ஓபிசி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையெழுத்துப் பெறப்பட்ட கோரிக்கைமனுவை அளித்தார். அதனடிப்படையில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்த ஒப்புக்கொண்ட மன்மோகன்சிங் அரசு, அதன்பின் நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு சமூக, பொருளாதார, கல்வி, சாதிவாரி கணக்கெடுப்பை நடத்தி அதன் முடிவை வெளியிடவில்லை.

2021ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பை சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பாக நடத்த வேண்டும் என்று இன்றைய பிரதமர் நரேந்திர மோடியிடம் நான் நேரில் வலியுறுத்தினேன். மூன்று முறை கடிதம் எழுதினேன். மக்களவையிலும், மாநிலங்களவையிலும் அன்புமணி ராமதாஸ் பல முறை வலியுறுத்தியிருந்தார்.

பா.ம.க.வின் முயற்சியால்கடந்தமூன்று முறை சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படுவது கிட்டத்தட்ட சாத்தியமாகி கடைசி நேரத்தில் கை நழுவிய நிலையில், இப்போது சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று மத்திய அரசு அறிவித்திருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இது பாட்டாளி மக்கள் கட்சியின் 30 ஆண்டுகளுக்கும் மேலான முயற்சிக்கு கிடைத்த பலன் ஆகும். இதற்கு பிரதமர் நரேந்திர மோடிக்கு பா.ம.க. சார்பில் நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை எவ்வளவு விரைவாக தொடங்க முடியுமோ, அவ்வளவு விரைவாக மத்திய அரசு தொடங்க வேண்டும். அதன் மூலம் அனைவருக்கும் முழுமையான சமூகநீதி கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

அதேநேரத்தில் மத்திய அரசு நடத்தும் கணக்கெடுப்பு மேலோட்டமான ஒன்றாகத்தான் இருக்கும் என்பதாலும், தமிழ்நாட்டில் உள் இட ஒதுக்கீடு வழங்க கூடுதல் புள்ளிவிவரங்கள் தேவை என்பதாலும் தமிழக அரசு 2008ம் ஆண்டின் புள்ளிவிவரங்கள் சேகரிப்பு சட்டத்தின் கீழ் மக்களின் சாதி, கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் அறிய தனியாக சாதிவாரி சர்வே (Caste Survey) எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## எண்ணூர் காமராஜர் துறைமுகத்தில் கூடுதலாக இரண்டு நிலக்கரி இறக்கும் இயந்திரங்கள்

சென்னை, மே.2

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், திருவள்ளூர் மாவட்டம், எண்ணூர் காமராஜர் துறைமுகத்தில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் ரூ.197 கோடி மதிப்பீட்டில் நிலக்கரி பெர்த் 3ல் எண்ணூர் சிறப்பு பொருளாதார மண்டல அனல்மின்நிலையத்திற்கு தேவையான நிலக்கரி தேவையை பூர்த்தி செய்யும் வகையில் கூடுதலாக இரண்டு நிலக்கரி இறக்கும் இயந்திரங்களின் செயல்பாட்டினை கூடுதல் தலைமைச் செயலாளர்/ தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைவர் ஜெ. ராதாகிருஷ்ணன் துவக்கி வைத்தார்.



இந்த நிலக்கரி இறக்கும் இயந்திரங்கள் 1,20,000 டி. டபள்யு. டி. கொள்ளளவு திறன் கொண்ட கப்பலில் இருந்து நிலக்கரியை இறக்க இயலும். ஒவ்வொரு நிலக்கரி இறக்கும் இயந்திரங்களும் மணிக்கு 2,600 டன் நிலக்கரியை இறக்கும்திறன் கொண்டது. இந்த இயந்திரங்கள் எண்ணூர் சிறப்பு பொருளாதார மண்டல அனல் மின் நிலையத்திற்காக நிறுவப்பட்டிருந்தாலும், இந்த பெர்த் மூலமாக வடசென்னை அனல் மின் நிலையம் நிலை3ன் பாய்லர் பங்கர்களுக்கு நேரடியாக கொண்டு செல்ல முடியும். மேலும், இந்த இயந்திரங்கள் மூலம் வடசென்னை அனல் மின் நிலையம் நிலை1 மற்றும் 2ன் நிலக்கரி கிடங்கு மற்றும் பாய்லர் பங்கர்களுக்கும் கொண்டு செல்வதற்கான சிறப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த இயந்திரங்கள் நிறுவும் பணிக்காலம் 24 மாதங்களாக இருந்தபோதிலும், 22 மாதங்களிலேயே பணிகள் முழுமையாக முடிவுபெற்று செயல்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதன் மூலம் வடசென்னை அனல் மின் நிலையங்களின் நிலக்கரி கையாளும் செயல்பாட்டில் தமிழ்நாடு மின் வாரியத்தின் குறிப்பிடத்தக்க ஒருமைல்கல் ஆகும். என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரூ. 1.67 கோடி ஜி.எஸ்.டி. வரி செலுத்தக்கோரி கூலித்தொழிலாளிக்கு நோட்டீஸ்

வேலூர், மே.2

வேலூர் மாவட்டம் குடியாத்தம் அருகே வெள்ளேரி கிராமத்தை சேர்ந்தவர் கவிதா. இவர் 100 நாள் திட்டத்தில் (மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்) வேலை செய்து வருகிறார்.

இந்நிலையில், கவிதாவுக்கு ஜி.எஸ்.டி. அலுவலகத்தில் இருந்து நோட்டீஸ் ஒன்று வந்துள்ளது. அதில், நீங்கள் 1 கோடியே 67 லட்ச ரூபாய் ஜி.எஸ்.டி. வரி செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

சென்னையை சேர்ந்த தர்ஷினி இண்டஸ்ட்ரீஸ் என்ற பெயரில் ஜி.எஸ்.டி. பதிவு செய்துள்ளீர்கள். உரிய வரி செலுத்தாததால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது என்று நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.




இதை கண்டு அதிர்ச்சியடைந்த கூலித்தொழிலாளி கவிதா தனது, பான் கணக்கு எண் மூலம் மோசடி நடந்துள்ளதாக புகார் அளித்துள்ளார். இது தொடர்பாக அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கூலித்தொழிலாளிக்கு ரூ.1.67 கோடி ஜி.எஸ்.டி. வரி செலுத்தக்கோரி நோட்டீஸ் வந்துள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## நெல்லை: சித்தப்பாவை கொலை செய்த மகன் உள்பட 2 பேர் கைது

திருநெல்வேலி மே2

நெல்லை மாவட்டம், முன்னீர்பள்ளம் காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட வடக்கு பொன்னாக்குடி, தெற்கு தெருவை சேர்ந்த அருணாச்சலம் (வயது 48) என்பவருக்கும் அவரது அண்ணன் மாரி முத்து என்பவரின் மகன் இசக்கிமுத்து (28) என்பவருக்கும் இடையே பூர்வீக சொத்தை பிரிப்பது தொடர்பாக பிரச்சினை ஏற்பட்டு முன்விரோதம் இருந்து வந்துள்ளது.

இதனை மனதில் வைத்துக் கொண்டு நேற்று முன்தினம் (28.4.2025) அருணாச்சலம் தனது வீட்டின் அருகே நின்று கொண்டிருந்தபோது இருசக்கர வாகனத்தில் அங்கு வந்த இசக்கிமுத்து, அருணாச்சலத்திடம் தகராறில் ஈடுபட்டு அவதூறாக பேசி, இரும்பு கம்பியால் தலையில் தாக்கி கொலை செய்துள்ளார்.




இதுகுறித்து அருணாச்சலத்தின் மகளான செல்வவேனி முன்னீர்பள்ளம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அந்த புகாரின் அடிப்படையில் முன்னீர்பள்ளம் போலீஸ் இன்ஸ்பெக்டர் சுரேஷ் வழக்குப்பதிவு செய்து இசக்கிமுத்து, மாரிமுத்துவின் மனைவி சுப்புலட்சுமி (50) ஆகிய 2 பேரையும் தேடி வந்த நிலையில், நேற்று (29.4.2025) அவர்களை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த போலீசார் நடவடிக்கை எடுத்தனர்.

## சம்பளம் தராததால் காரை திருடிய ஊழியர்: சென்னை ஷோரூமில் ருசிகரம்

சென்னை, மே.2

சென்னை அண்ணா நகரில் பிரபல கார் ஷோரூம் ஒன்று உள்ளது. இங்கு ஊழியராக வேலை பார்த்து வரும் ரமேஷ் என்பவருக்கு, அந்த நிறுவனம் ரூ.50 ஆயிரம் சம்பள பாக்கி வைத்ததாக கூறப்படுகிறது.

பலமுறை கேட்டும் சம்பளபாக்கிகிடைக்காததால் விரக்தி அடைந்த ரமேஷ், மாற்றி யோசிக்கத்தொடங்கினார். அப்போது, வாடிக்கையாளர் புதிதாக வாங்கிய கார் ஒன்றுக்கு, ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் பதிவு எண் வாங்குவதற்காக கடைக்கு வெளியே நிறுத்தப்பட்டிருந்தது. திடீரென அந்த காரை காணவில்லை.




உடனடியாக, நிறுவன மேலாளர், புதிய கார் மாயமானது குறித்து அண்ணாநகர் போலீசில் புகார் செய்தார். புகாரின் பேரில் போலீசார் விசாரணை நடத்தி வந்தனர். அப்போது, அந்த கார் பக்கத்து தெருவில் சாலையோரம் நிறுத்தப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

யார் காரை இங்கு கொண்டுவந்துநிறுத்தியது என்று போலீசார் விசாரணை நடத்தியபோது, ஷோரூமில் வேலை பார்க்கும் ஊழியரான ரமேஷ் காரை திருடியது தெரிய வந்தது.

சம்பள பாக்கி ரூ.50 ஆயிரத்தை தராததால் காரை திருடியதாக போலீசாரிடம் அவர் ஒப்புக் கொண்டார். அவரை கைது செய்த போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## சாதிவாரி கணக்கெடுப்பு: ராகுல் காந்தி முயற்சிக்கு கிடைத்த வெற்றி செல்வப்பெருந்தகை

சென்னை, மே.1ற்

இந்தியாவில் கடைசியாக 1931ம் ஆண்டு சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.அதன்பின்னர், 2011ம் ஆண்டில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் சாதி விவரமும் சேர்க்கப்பட்டது. ஆனால், அதன் தரவுகள் வெளியிடப்படவில்லை.

2021ல் நடத்தப்பட வேண்டிய மக்கள்தொகை கணக்கெடுப்பு கொரோனாவல் தள்ளிப்போன நிலையில், இனி நடத்தப்பட உள்ள அந்த கணக்கெடுப்பில் சாதி விவரமும் சேர்க்கப்படும் என மத்திய



அரசு தற்போது அறிவித்துள்ளது. காங்கிரஸ், திமுக, பாமக உள்ளிட்ட கட்சிகளின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்றுள்ளது மத்திய அரசு.

இந்த நிலையில் , சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி முயற்சிக்கு கிடைத்த வெற்றி என தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் ,

மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி அவர்களின் தொடர் அழுத்தத்தின் விளைவாக மத்திய அரசு மக்கள் தொகை கணக்கெடுப்புடன் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த ஒப்புக் கொண்டுள்ளது. மத்திய அரசின் இந்த முடிவு, தலைவர் ராகுல் காந்திமுயற்சிக்குகிடைத்த வெற்றியாகும்.என தெரிவித்துள்ளார்

## நெல்லை மாநகர எல்லைக்குள் நுழைய 2 பேருக்கு தடை: போலீஸ் கமிஷனர் உத்தரவு

திருநெல்வேலி மே.2

திருநெல்வேலி மாநகர போலீஸ் கமிஷனர் சந்தோஷ் ஹாதிமணி வெளியிட்டுள்ள பத்திரிகை செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது:

நெல்லை மாநகர எல்லைக்குள் பொதுமக்களின் உயிர் மற்றும் சொத்துக்களுக்கு அச்சம், ஆபத்து மற்றும் தீங்கு விளைவிக்கும் குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்களை சென்னை மாநகர காவல் சட்டம் பிரிவு 51Aன் படி மாநகர எல்லைக்குள் நுழைய தடை விதிக்கும் அதிகாரம் காவல் ஆணையருக்கு உள்ளது. அதன்படி திருநெல்வேலி




மாநகரம், பேட்டை, பாண்டியாபுரம், தெற்கு தெருவைச்சேர்ந்தமுருகன் மகன் முத்துக்குமார் என்பவர் 28.4.2025ல் இருந்தும் மற்றும் பாளையங்கோட்டை, வண்ணார்பேட்டை, இளங்கோநகர், குட்டத்துறை, கீழத்தெருவைச் சேர்ந்த ஆறுமுகம் மகன் படுகையூர் பாஸ்கர் என்பவர் 29.4.2025ல் இருந்தும் 6 மாதங்களுக்கு நீதிமன்ற வழக்கு விசாரணை, காவல்துறை வழக்கு விசாரணை போன்ற காரணங்களைத் தவிர திருநெல்வேலி மாநகரின் காவல் எல்லைக்குள் நுழைய தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மாநகர எல்லைக்குள் நுழைய தடை விதிக்கப்பட்ட முத்துக்குமார் மீது 6 வழக்குகளும், படுகையூர் பாஸ்கர் மீது 34 வழக்குகளும் உள்ளன என்பதுகுறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

2.5.2025

## நீட் நுழைவுத் தேர்வுக்கான ஹால் டிக்கெட் இணையதளத்தில் வெளியீடு

சென்னை, மே.2

நாடு முழுவதும் உள்ள மருத்துவக் கல்லூரிகளில், எம்பிபிஎஸ், பிடிஎஸ் படிப்புகள் மற்றும் சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஹோமியோபதி உள்ளிட்ட மருத்துவ படிப்புகள் மற்றும் கால்நடை மருத்துவப் படிப்பின் அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்களுக்கு நீட் தேர்வு மூலம் மாணவர் சேர்க்கை நடத்தப்படுகிறது.

நீட் தேர்வை தேசிய தேர்வுகள் முகமை (என்டிஏ) ஆண்டு தோறும் ஒரு முறை நடத்தி வருகிறது. அதன்படி, 202526ஆம் கல்வியாண்டுக்கான நீட் தேர்வு வரும் மே 4ஆம் தேதி நாடு முழுவதும் நடைபெற உள்ளது. தமிழகத்தில்சுமார்ஒன்றரைலட்சம் மாணவர்கள் நீட் தேர்வு எழுதவுள்ளனர். பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட அரசு பள்ளி மாணவர்களும் இந்த தேர்வில் பங்கேற்கவுள்ளனர்.




இந்தநிலையில், 2025 26ஆம் கல்வியாண்டுக்கான நீட் தேர்வுக்கான நுழைவுச்சீட்டு இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

மே 4ம் தேதி நீட் நுழைவுத்தேர்வு நடைபெற உள்ள நிலையில் நுழைவுச்சீட்டு வெளியாகி உள்ளது.

தேர்வர்கள் neet.nta.nic.in என்ற இணையதளத்தில் பதவிறக்கம் செய்து கொள்ளலாம். நீட் தேர்வு தொடர்பான சந்தேகங்களுக்கு 01140759000 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம் என்று தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது.

## கோவில் கொடிமரத்தின் முக்கியத்துவம் என்ன?



கொடிமரத்தின் உச்சியில் அந்தந்த கோவில் இறைவனின் வாகனம் அடையாள சின்னமாக அமைக்கப்படும்.

கொடிமரம் என்பது இந்து கோவில்களில் பலி பீடத்துக்கு அருகே கொடியேற்றுவதற்காக அமைக்கப்பட்ட மரமாகும். பல ஆலயங்களில் கொடிமரம் உள்ளது. சமஸ்கிருதத்தில் 'துவஜஸ் தம்பம்' என்று அழைக்கப்படும் கொடிமரத்திற்கு பல்வேறு சிறப்புகள் உள்ளன.

பொதுவாக ஆலயங்கள் ஆகம விதிப்படி கட்டப்படுகின்றன.

அதாவது ஒரு கோவிலை புனித உடலுடன் ஒப்பிடலாம். அதன்படி தலைப்பகுதியை கருவறையாகவும், மார்புப்பகுதியை மகாமண்டபமாகவும், வயிற்றுப் பகுதியில் நாபி எனப்படும் தொப்புள் பகுதி கொடிமரமாகவும், கால் பகுதியை ராஜ கோபுரமாகவும் கூறப்படுகிறது.

இவ்வாறு ஆகம விதிப்படிகட்டப்படும் கோவில்களில் திருவிழா நடைபெறும்போது முதல் நாள் கொடியேற்றமானது நடைபெறும். தேவர்கள், இந்த கொடிமரத்தின் வழியாகத் தான் கோவிலுக்குள் வருவதாக கூறப்படுகிறது.

பொதுவாக சந்தனம், தேவதாரு, செண்பகம், வில்வம், மகிழம் முதலிய ஐந்து வகையான மரங்களை பயன்படுத்தி கொடிமரம் தயாரிக்கப்படுகிறது. மனிதனின் முதுகு தண்டைப் போன்றது கோவிலின் கொடிமரம். நமது முதுகுத் தண்டுவடத்தில் 32 எலும்பு வளையங்கள் உள்ளன. அது போல கொடிமரமும் 32 வளையங்களுடன் அமைக்கப்படுகிறது. கோவில் சன்னிதிக்கும், கோபுரத்துக்கும் இடையே கொடிமரம் அமைந்திருக்கும். அதிகபட்சமாக 13 மீட்டர் இடைவெளியில் அமைக்கப்படும். கொடிமரம் ராஜகோபுரத்தை விட அதிக உயரமாக இருக்காது. அதே நேரம் கருவறை விமானத்துக்கு நிகரான உயரத்தில் இருக்கும்.

கொடிமரம் மூன்று பாகங்களை கொண்டது. இது பிரம்மா, விஷ்ணு, சிவன் என மும்மூர்த்திகளின் அம்சம் பொருந்தியது. சதுரமான அடிப்பாகம் பிரம்மனையும், எண்கோணப்பகுதியான இடைப்பாகம் விஷ்ணுவையும், உருண்டை நீண்ட மேல்பாகம் சிவனையும் குறிக்கிறது. எனவே கொடி மரத்தை வணங்குவது சிறப்பான ஒன்றாகும்.

கொடிமரத்தின் ஐந்தில் ஒரு பாகம் பூமிக்குள் இருக்கும்படி அமைப்பர். கொடி மரத்தின் மேலே உலோகத் தகடுகள் அமைக்கப்பட்டிருக்கும். சில கோவில்களில் கொடிமரத்தை இடி, மின்னலை தாங்கும் இடிதாங்கியாகவும் பயன்படுத்தப்படுவதாக கூறப்படுகிறது.

கோவிலில் இறைவனை வணங்க முடியாவிட்டாலும் கொடி மரத்தையாவது வணங்குவது அவசியம். ஏனென்றால் கோவிலில் இறைவனை தஞ்சமடைவதும், கொடி மரத்தின் கீழே விழுந்து வணங்குவதும் இணையாக கருதப்படுகிறது. இறைவனின் அருளைப்பெற, நம்மை தகுதிப்படுத்த கொடிமர வணக்கம் அவசியமாகும்.

நம்முடைய ஆன்மா இறைவனை தஞ்சமடைய வேண்டுமானால், நமது மனம் ஒருநிலையுடன் நிறுத்தப்பட வேண்டும். இதை உணர்த்தவே கொடி மரம் நேராக நிமிர்ந்து நிற்பதாக சொல்கிறார்கள்.

அசுர சக்திகளை அழிக்கவும், சிவகணங்களை கோவிலுக்குள் வரவைக்கவும், ஆலயத்தையும் பக்தர்களையும் காக்கவும் கொடி ஏற்றம் நடத்தப்படுகிறது.

கொடி மரத்தின் உச்சியில் அந்தந்த கோவில் இறைவனின் வாகனம் அடையாள சின்னமாக அமைக்கப்படும். அதன்படி, விநாயகர் கோவிலில் மூசிகம், சிவன் கோவிலில் நந்தி, விஷ்ணு கோவிலில் கருடன், குபேரன் கோவிலில் நரன், முருகன் கோவிலில் மயில் அல்லது சேவல், சாஸ்தா கோவிலில் குதிரை, வருணன் கோவிலில் அன்னம், எமன் கோவிலில் எருமை, சனிபகவான் கோவிலில் காகம், இந்திரன் கோவிலில் யானை, துர்க்கை மற்றும் அம்மன் கோவில்களில் சிம்மம் என உருவங்கள் பொறித்த கொடி ஏற்றப்படும். இவ்வாறு ஏற்றப்படும் கொடியானது திருவிழா இறுதி நாளில் இறக்கப்படும்.

இத்தகைய பல்வேறு சிறப்புகளை உடைய கொடி மரத்துக்கு மூலலிங்கத்துக்கு செய்யும் அபிஷேகம், ஆராதனை, நைவேத்தியம் முதலான அனைத்தும் செய்ய வேண்டும் என்பது விதி. அந்த அளவுக்கு கொடிமரம் மூலவருக்கு நிகராக கருதப்படுகிறது. கொடிமரத்துக்கு அருகில் நின்று நாம் வேண்டும் எல்லா பிரார்த்தனைகளும் மூலவரிடம் சென்றடையும் என்பது நம்பிக்கை.

## செங்கல்பட்டு ஐடிஐ மைதானத்தில் 307 தனியார் பள்ளி பேருந்துகளை கலெக்டர் ஆய்வு: குறைபாடுள்ள 14 பேருந்துகள் நிராகரிப்பு

செங்கல்பட்டு, மே.2

செங்கல்பட்டு ஐடிஐ மைதானத்தில் தனியார் பள்ளி பேருந்துகள் தரம் குறித்த செங்கல்பட்டு வட்டார போக்குவரத்து அலுவலர் இளங்கோவன் தலைமையிலும் மோட்டார் வாகன ஆய்வாளர்கள் ஷமீதா மற்றும் முரளி ஆகியோர் முன்னிலையிலும் தனியார் பள்ளி பேருந்துகள் குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் அருண்ராஜ் நேரில் வந்து ஒவ்வொரு பேருந்துக்குள்ளும் ஏறி பிரேக்சரியாகபிடிக்கிறதா, பேருந்தின் உள்ளே இருக்கைகள் மற்றும் விபத்து காலங்களில் அவசரகாலத்தில் தப்பிக்கும் வகையில் அவசர வழி கதவு, படிக்கட்டுகள், உயரம், ரிவர்ஸ் கேமரா, பிளாட்பார்ம் உறுதித்தன்மை, தீயணைப்பு கருவியின் தரம், முதலுதவி பெட்டி, வேகக்கட்டுப்பாட்டு கருவி மற்றும் ஜிபிஎஸ் கருவி பொறுத்தப்பட்டிருக்கிறதா என ஆய்வு செய்யப்பட்டது. அதுமட்டுமின்றி கலெக்டரும் மோட்டார் வாகன ஆய்வாளரும் பேருந்தை ஓட்டிப்பார்த்து ஆய்வு மேற்கொண்டனர்.



இதில் மாவட்ட கல்வி அலுவலர்,காவல்துணைக் கண்காணிப்பாளர் புகழேந்திகணேஷ் ஆகியோர் பங்கேற்றனர்.

செங்கல்பட்டு திருக்கழுக்குன்றம், மதுராந்தகம் வட்டார போக்குவரத்து அலுவலகங்களின் கட்டுப்பாட்டில் 114 பள்ளிகள் இயங்கி வருகின்றன. இந்த மொத்த பள்ளிகளில் செங்கல்பட்டு–341 பேருந்துகள், திருக்கழுக்குன்றம் – 106 பேருந்துகள், மதுராந்தகம் 161 பேருந்துகள் என மொத்தம் 607 பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

இதில் முதல்கட்டமாக நேற்று 307 பள்ளி பேருந்துகள் ஆய்வு மேற்க்கொள்ளப்பட்டன. இதில் 14 பேருந்துகள் தரத்தில் சில குறைபாடுகள் இருப்பதாக நிராகரிக்கப்பட்டன. அவர்களுக்கு பத்து நாட்கள் அவகாசம் கொடுக்கப்பட்டு அதற்குள் தரத்தை உயர்த்தி நற்சான்று பெற்றுக்கொள்ள வலியுறுத்தப்பட்டது.

மேலும் இந்த ஆய்வின்போது ஒவ்வொரு ஓட்டுனர் மற்றும் அவரது உதவியாளர்கள் என அனைவருக்கும் கண்பார்வை, ரத்த அழுத்தம், சர்க்கரை அளவு என மருத்துவர்களை கொண்டு மருத்துவ பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டது.

அதேபோல், பேருந்து சென்று கொண்டிருக்கும் போது தீவிபத்து ஏற்பட்டால் தன்னையும் தங்களை நம்பி வரும் மாணவமாணவிகளையும் காப்பாற்றும் விதமாக தீயில் இருந்து எப்படி காப்பாற்றி கொள்வது என்பது குறித்து செங்கல்பட்டு மண்டல தீயணைப்புத்துறை நிலைய உதவி அலுவலர் செந்தில்குமரன் தலைமையில் தீயணைப்பு வீரர்கள் பங்கேற்ற செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

## கும்பகோணத்தில் கலைஞர் பல்கலை. அமைக்க இடம்: அமைச்சர் ஆய்வு

கும்பகோணம், மே.2

கும்பகோணத்தில் கலைஞர் பல்கலைக்கழகம் அமைக்க கும்பகோணம் அரசினர் ஆடவர் கலைக் கல்லூரி உள்ளிட்ட பல்வேறு இடங்களை உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் நேற்று ஆய்வு செய்தார். அவருடன் கலெக்டர் பிரியங்கா பங்கஜம், எம்.பி கல்யாண சுந்தரம், எம்எல்ஏ அன்பழகன் மற்றும் முன்னாள் எம்.பி ராமலிங்கம் ஆகியோர் இருந்தனர். இதன்பின்னர் அமைச்சர் கோவி.செழியன் அளித்த பேட்டி: மாணவர்கள் கல்விக்காக ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என்று முடிவெடுத்து பாரதிதாசன் பல்கலைக்கழகததில் இருந்து தஞ்சை, திருவாரூர், நாகை மற்றும் அரியலூர் ஆகிய 4 மாவட்டங்களை உள்ளடங்கிய 18 கல்லூரிகளுக்கான ஒருதனி பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என்றும் அதுகலைஞர் பெயரில் கும்பகோணத்தை தலைமையிடமாக கொண்டு அமைக்கப்படும் என்று சட்டப்பேரவையில் முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார்.



இதன்படி, இந்தாண்டே பல்கலைக்கழகம் துவக்கப்பட வேண்டும் என்று முதலமைச்சர், துணை முதலமைச்சர் ஆலோசனையின்பேரில் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான இடங்களை ஆய்வு செய்தோம்.சாக்கோட்டை செல்லும் வழியில் உள்ள கலையரங்கம், கும்பகோணம் அரசு கலைக்கல்லூரியில்பழைய மாணவர் விடுதியை பார்த்து உள்ளோம். இந்த இடங்கள் தற்காலிக பல்கலைக்கழகம் துவக்குவதற்கு சரி என கலெக்டரிடம் அறிவுறுத்தியுள்ளோம். எனவே இந்த இடத்தில் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான கருத்துருவை கலெக்டர் அரசுக்கு அனுப்பி முதல்வரின் ஒப்புதலோடு அவர்கள் விரும்புகிற தேதியில்கலைஞர் பெயரில் பல்கலைக்கழகம் இந்த இடத்தில் துவங்குவதற்கானவாய்ப்பு இருக்கிறது. நிரந்தர பல்கலைக்கழகம் அமைக்கும் இடங்களை ஆய்வு செய்தோம். அதன் அடிப்படையில் கும்பகோணம் அருகே கள்ளப்புலியூரில் 60 ஏக்கர் இடத்திலும் 50 ஏக்கர் இடத்திலும் இடம் தேர்வு செய்யலாம் என்று இருக்கிறோம்.

கும்பகோணத்தில் இருந்து வலங்கைமான் செல்லும் பாதையில் 40 ஏக்கர் இடம் உள்ளது. அதையும் நாங்கள் ஆய்வு செய்கிறோம். ஜூன் மாதத்தில் முதல்வர் தஞ்சை வருவதாக அறிவித்துள்ளார். முதலமைச்சர் விரும்பினால் அதே தேதியில் நிரந்தர பல்கலைக்கழகம் அமைப்பதற்காக அடிக்கல் நாட்டு விழா நடத்துவதற்கு சாத்திய கூறுகள் உள்ளன. முதல்வர் அறிவித்துள்ள இந்த அறிவிப்புக்கு ஒட்டுமொத்த டெல்டா மாவட்ட மக்கள் சார்பில் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். இவ்வாறு கூறினார்.

## அஜித்துக்கு வாழ்த்து சொன்ன ரஜினிகாந்த்



சினிமா மற்றும் கார் பந்தயத்தில் சிறந்து விளங்கும் அஜித் குமாரின் செயலை பாராட்டும் விதமாக ஜனாதிபதி திரவுபதி முர்மு அவருக்கு பத்மபூஷன் விருது வழங்கி கவுரவித்தார். அந்த விருது வழங்கும் விழாவில் அஜித் குமார் குடும்பத்தினரும் கலந்து கொண்டார்.

இந்திய அரசின் உயரிய விருதுகளின் ஒன்றாகப் பார்க்கப்படும் பத்மபூஷன் விருதை அஜித்குமார் பெற்றதற்கு, பலரும் வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

அந்தவகையில் தற்போது அஜித்துக்கு ரஜினிகாந்த் வாழ்த்து கூறி இருக்கிறார். மும்பையில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காக சென்னை விமானநிலையம் வந்த ரஜினிகாந்த், நடிகர் அஜித்குமாருக்கு வாழ்த்து கூறினார்

## வருண் தேஜ் ரித்திகா நாயக் படத்தில் சிறப்பு பாடலுக்கு நடனமாடும் பிரபல நடிகை



பிரபல தெலுங்கு நடிகர் வருண் தேஜ். இவர் சமீப காலமாக தொடர் தோல்விகளை சந்தித்து வருகிறார். இதனால், ஆக்சன், பீரியட் டிராமாக்களில் இருந்து விலகி, தற்போது ஹாரர்காமெடி பக்கம் திரும்பி இருக்கிறார். வருண் தேஜ், இந்தோகொரிய திகில்காமெடி படமான விடி15 படத்தில் நடிக்கிறார்.

இதில், கொரியன் கனகராஜு என்ற கதாபாத்திரத்தில் வருண் தேஜ் நடிக்கிறார். ஹாய் நானா பட நடிகை ரித்திகா நாயக் கதாநாயகியாக நடிக்கிறார். யுவி கிரியேஷன்ஸ் மற்றும் பர்ஸ்ட் பிரேம் என்டர்டெயின்மென்ட் இணைந்து தயாரிக்கும் இப்படத்திற்கு எஸ்.தமன் இசையமைக்கிறார்.

இந்நிலையில், இப்படத்தின் படப்பிடிப்பில் ஜாம்பி ரெட்டி பட நடிகை தக்சா நகர்கர் இணைந்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது இன்ஸ்டாகிராம் ஸ்டோரியில் இரண்டு புகைப்படங்களைப் பகிர்ந்துள்ளார்.

அவற்றில் ஒன்றில் மேக்கப் அறையின் கண்ணாடி முன்பு அமர்ந்து செல்பி எடுப்பது போன்றும், மற்றொன்றில் வேனிட்டி வேனில் யுவி கிரியேஷன்ஸ் மற்றும் பர்ஸ்ட் பிரேம் என்டர்டெயின்மென்ட் என்று தயாரிப்பு நிறுவனங்களின் பெயர்கள் எழுதப்பட்டிருப்பதும் தெரிகிறது.

இதன்மூலம் அவர் இப்படத்தில் இணைந்திருப்பது உறுதியாகி இருக்கிறது. ஆனால், எந்த காதாபாத்திரத்தில் நடிக்கிறார் என்று தெரியாதநிலையில், சிறப்பு பாடல் ஒன்றிற்கு நடனமாட உள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

## கயாடு லோஹரை தொடர்ந்து 'எஸ்.டி.ஆர் 49' படத்தில் இணைந்த சந்தானம்




தமிழ் திரையுலகின் முன்னணி நடிகர்களில் ஒருவரான சிம்பு, தற்போது இயக்குனர் மணிரத்னம் இயக்கியுள்ள "தக் லைப்" படத்தில் நடித்து முடித்துள்ளார். இப்படம் ஜூன் 5ம் தேதி வெளியாக உள்ளது.

அதனைதொடர்ந்து,'பார்க்கிங்'திரைப்படஇயக்குனர்ராம்குமார் பாலகிருஷ்ணன்இயக்கத்தில்'எஸ்டிஆர்49'படத்திலும்,தேசிங்கு பெரியசாமி இயக்கத்தில் 'எஸ்டிஆர் 50' படத்திலும், அஸ்வத் மாரிமுத்து இயக்கத்தில் 'எஸ்டிஆர் 51' படத்திலும் சிம்பு நடிக்க உள்ளார்.

இதில், ராம்குமார் பாலகிருஷ்ணன் இயக்கத்தில் சிம்பு நடிக்க உள்ள படத்திற்கு சாய் அபயங்கர் இசையமைக்கிறார். 'டிராகன்' படத்தின் மூலம் ரசிகர்களை கவர்ந்த கயாடு லோஹர் கதாநாயகியாக நடிக்கிறார். மேலும் சமீபகாலமாக இப்படத்தில் சந்தானம் நடிக்க உள்ளதாக தகவல் பரவி வந்தநிலையில் தற்போது அது உறுதியாகி இருக்கிறது. இதனை படக்குழு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

சிம்புவும், சந்தானமும் இணைந்து ஏற்கனவே 'வாலு, வானம், ஒஸ்தி, சிலம்பாட்டம்' போன்ற பல படங்களில் இணைந்து நடித்திருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐபிஎல் : பஞ்சாப் வீரர் மேக்ஸ்வெல் விலகல்

10 அணிகள் இடையிலான ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு இடங்களில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில், இந்த தொடரின் சேப்பாக்கம் மைதானத்தில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் இதில் தோனி தலைமையிலான சென்னை சூப்பர் கிங்ஸ் அணி, ஸ்ரேயாஸ் ஐயர் தலைமையிலான பஞ்சாப் கிங்ஸ் அணியுடன் மோதுகிறது.



இன்றைய ஆட்டத்திற்கான டாஸ் சுண்டப்பட்டது. இதில் டாஸ் வென்ற பஞ்சாப் கிங்ஸ் முதலில் பந்துவீசுவதாக அறிவித்துள்ளது. அதன்படி சென்னை அணி முதலில் பேட்டிங் செய்து வருகிறது .

இந்த போட்டியில் காயம் காரணமாக பஞ்சாப் வீரர் மேக்ஸ்வெல் பங்கேற்கவில்லை . மேக்ஸ்வெல் அடுத்த ஆட்டத்தில் விளையாடுவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் மீதமுள்ள அனைத்து போட்டியிலும் இருந்து மேக்ஸ்வெல் விலகியுள்ளார் .

## மனைவியுடன் கேக் வெட்டி பிறந்தநாளை கொண்டாடிய ரோகித் சர்மா



இந்திய கிரிக்கெட் அணியின் கேப்டனும், தொடக்க ஆட்டக்காரருமான ரோகித் சர்மா இன்று தனது 38வது பிறந்தநாளை கொண்டாடுகிறார். ரோகித் சர்மா தற்போது ஐபிஎல் போட்டிகளில் மும்பை அணிக்காக விளையாடி வருகிறார்.

ரோகித் சர்மாவுக்கு கிரிக்கெட் வீரர்கள், ரசிகர்கள் என பலரும் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், ரோகித் சர்மா தனது பிறந்தநாளை மனைவி ரித்திகா மற்றும் மும்பை அணியினருடன் கேக் வெட்டி கொண்டாடியுள்ளார் .இது தொடர்பான வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

## மாட்ரிட் ஓபன் டென்னிஸ்: கேஸ்பர் ரூட் காலிறுதிக்கு முன்னேற்றம்



பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள மாட்ரிட் ஓபன் டென்னிஸ் தொடர் ஸ்பெயினில் நடைபெற்று வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இன்று நடைபெற்ற ரவுண்ட் ஆப் 16 சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரர்களான டெய்லர் பிரிட்ஸ் (அமெரிக்கா) கேஸ்பர் ரூட் (நார்வே) ஆகியோர் மோதினர். இந்த போட்டியில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய கேஸ்பர் ரூட் 7-5, 6-4 என்ற செட் கணக்கில் டெய்லர் பிரிட்ஸை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார்.

## சாம் கரன் அரைசதம்..பஞ்சாப் அணிக்கு 191 ரன்கள் இலக்கு நிர்ணயித்த சென்னை




10 அணிகள் இடையிலான ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு இடங்களில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில், இந்த தொடரின் சேப்பாக்கம் மைதானத்தில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் இதில் தோனி தலைமையிலான சென்னை சூப்பர் கிங்ஸ் அணி, ஸ்ரேயாஸ் ஐயர் தலைமையிலான பஞ்சாப் கிங்ஸ் அணியுடன் மோதுகிறது.

இன்றைய ஆட்டத்திற்கான டாஸ் சுண்டப்பட்டது. இதில் டாஸ் வென்ற பஞ்சாப் கிங்ஸ் முதலில் பந்துவீசுவதாக அறிவித்துள்ளது. அதன்படி சென்னை அணி முதலில் பேட்டிங் செய்தது .

தொடக்கத்தில் ஷேக் ரஷீத் 11 ரன்கள், ஆயுஷ் மத்ரே 7 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தனர். பின்னர் சாம் கரன், டேவால்ட் பிரேவிஸ் இருவரும் இணைந்து சிறப்பாக விளையாடினர். பந்துகளை பவுண்டரி , சிக்சருக்கு பறக்க விட்டனர். பிரேவிஸ் 32 ரன்களில் ஆட்டமிழந்தார். சாம் கரன் அரைசதமடித்து அசத்தினார் . தொடர்ந்து அதிரடியாக ஆடிய சாம் கரன் 88 ரன்கள் எடுத்து வெளியேறினார்.பஞ்சாப் அணியில் சாஹல் ஹாட்ரிக் விக்கெட் வீழ்த்தினார்

இறுதியில் 19.2ஓவர்கள் முடிவில் சென்னை அணி 190ரன்களுக்கு ஆட்டமிழந்தது .தொடர்ந்து 191 ரன்கள் இலக்குடன் பஞ்சாப் அணி விளையாடுகிறது

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.